Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 19 of 2023**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of Addl.Witness P.W.17 | } | Defence |
| | } | |

Name of the Witness : மருத்துவர் சபரிநாதன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 09.01.2026.

எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி

பேராசியராகவும், தலைமை பொறுப்பிலும் உள்ளேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க மருத்துவர் மதன்ராஜ் அவர்களுக்கு பதிலாக அவரின் சான்றிதழ்களை வைத்து சாட்சியம் அளிக்க இந்த நீதிமன்றத்திலிருந்து கடிதம் அனுப்பியதன் பேரில் அவருக்கு பதிலாக கல்லூரி முதல்வர் அவர்கள் என்னை சாட்சியம் அளிக்க உத்திரவு பிறப்பித்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். அந்த அனுமதி கடிதம் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) மருத்துவர் மதன்ராஜ் அவர்கள் 29.05.2022 அன்று தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் உதவி பேராசியராக பணியில் இருந்த போது ஏரியூர் காவல் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தை பெரும்பாலை காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கணேசன் என்பவரால் 50 வயது மதிக்கதக்க கந்தசாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக கொண்டு வரப்பட்டார். அவரின் பிரேத பரிசோதனையானது அன்று மாலை 04.00மணியளவில் தொடங்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் போது அவரின் உடல் நடுத்தர வாக்குடன் காணப்பட்டது. மேலும் அவரின் வலது மார்பிலும், இடது வயிற்று பகுதியிலும் கருப்பு மச்சம் அடையாளமாக கண்டறியப்பட்டது. பிண விரைப்பானது உடல் முழுவதும் தென்பட்டது.

பிரேத பரிசோதனையின் போது கீழ்க்கண்ட வெளிபுற காயங்கள் காணப்பட்டன. வெளிபுற காயங்கள் அனைத்தும் உயிருடன் இருக்கும் போது ஏற்பட்ட காயங்களாகும்.

*1)* 9x4x உள்குழி ஆழ அளவிலான சாய்வான வெட்டுகாயம் கழுத்தின் பின்பகுதியில் காணப்பட்டது. அதன் விளிம்புகள் கன்றிய நிலையில் இருந்தன.

*2)* இரண்டு வெட்டுகாயங்கள் 20x5x எலும்பு ஆழம் வரை சாய்வான கழுத்தின் பின்புறம் காணப்பட்டது. அதன் விளிம்புகள் கன்றிய நிலையில் இருந்தன.

*3)* 9x1.5x எலும்பு ஆழம் வரை சாய்வான வெட்டுகாயம் வலது புற காதிலும், அதன் அடியில் உள்ள மண்டை ஓட்டிலும் காணப்பட்டது.

*4)* 4x1, 6x1 அளவுள்ள இரண்டு சாய்வான வெட்டு காயங்கள் வலது பக்கம் மற்றும் பின்பக்க தலையில் காணப்பட்டன.

*5)* செம்பழுப்பு நிற சீராய்ப்புடன் கூடிய கன்றிய காயம் கீழ்கண்ட பகுதியில் காணப்பட்டன. 3x2 வலது கண்புருவத்திலும், 3x3 வலதுகண்ணிற்கு கீழும், 3x2, 3x3. வலது புற கன்னத்திலும் காணப்பட்டன.

அவரின் நெஞ்சு மற்றும் வயிற்று பகுதியினை கூராய்வு செய்த போது கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டது.

விலா எலும்புகள் சாதாரண நிலையில் காணப்பட்டது. இதயத்தின் அறைகள் மற்றும் வால்வுகள் ரத்த கட்டிகள் உள்ளடக்கி இருந்தது. நுரையீரல்கள் வீங்கிய நிலையிலும், அதன் வெட்டு தோற்றத்தில் நுரை கலந்த திரவமும் வெளியேறிருந்தது. கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் வெட்டு தோற்றத்தில் கன்றிய நிலையில் காணப்பட்டது. மண்ணீரல் வெட்டு தோற்றத்தில் கூழ் போன்று காணப்பட்டது. அவரின் சிறுநீர் பையானது எதுவும் இல்லாமல் காணப்பட்டது. இடுப்புஎலும்புகள் சாதாரண நிலையில் இருந்தன.

அவரின் தலை மற்றும் கழுத்து பகுதியை கூராய்வு செய்த போது கீழ்க்கண்டவை காணப்பட்டது.

3) தலையின் மேல்உரை மற்றும் மண்டை ஓட்டில் இருந்த காயத்தினை ஏற்கனவே வெளிபுற காயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூளை வீங்கிய நிலையிலும் வெட்டு தோற்றத்தில் வெளிறிய நிறத்திலும் காணப்பட்டது. மண்டை ஓட்டின் அடிப்பகுதி மற்றும் நாவடி எலும்பு சாதாரண நிலையில் காணப்பட்டது. தண்டுவட எலும்புகளில் C2 C3, இடையே முறிந்து காணப்பட்டது.

4) மேலும் பிரேத பரிசோதனையின் போது பிரேதத்திலிருந்து இறைப்பை மற்றும் அதன் உறுப்புகள் சிறுகுடல் மற்றும் அதன் உறுப்புகள் பகுதி கல்லீரல், பகுதி சிறுநீரகம், ரத்தம் ஆகிய

சேகாரம் செய்து ரசாயன பகுப்பாய்விற்காக தருமபுரி தடவியல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிரேத பரிசோதனை முடிந்த பிறகு கந்தசாமி என்பவர் கழுத்தில் ஏற்பட்ட பல வெட்டு காயங்களின் விளைவால் இரத்த போக்கு மற்றும் அதிர்வு ஏற்பட்டு இறந்திருக்க கூடும் என்று முதன்மை மருத்துவர் கருத்துரை வழங்கியுள்ளார். இருப்பினும் இறுதி கருத்துரை வழங்குவதற்கு ரசாயன பகுப்பாய்வு முடிவுகளின் அறிக்கை பெற்ற பிறகு வழங்குவதாக கூறியுள்ளார்.

5) இரசாயன பகுப்பாய்வு முடிவில் உடல் உறுப்புகளில் எத்தனாலோ அல்லது வேறு எந்தவித விசமோ தென்படவில்லை என்றும் பகுப்பாய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. பகுப்பாய்வு முடிவினை பெற்ற பிறகு கந்தசாமி என்பவர் கழுத்தில் ஏற்பட்ட பல வெட்டு காயங்களின் விளைவால் இரத்தபோக்கு மற்றும் அதிர்வு ஏற்பட்டு இறந்திருக்க கூடும் என்று இறுதி கருத்துரை வழங்கியுள்ளார். மேலும் அவர் பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்கு முன்பாக 6லிருந்து 12 மணி நேரத்திற்குள்ளாக இறந்திருக்க கூடும் என்று சான்று வழங்கியுள்ளார். விசரா அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகவும், சடல கூராய்வு அறிக்கை **அ.சா.ஆ.15** ஆகவும், இறுதி கருத்துரை **அ.சா.ஆ.16** ஆகவும் குறியீடு

செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கொடுவாளால் தாக்கப்பட்டால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டு இறப்பு ஏற்படும்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஒரு நபரை வழி மறித்து தாக்கும் போது முன்புறம் மட்டும் தான் தாக்க முடியும் என்றால் சரியல்ல. நிறைய காயங்கள் இறந்து போன நபருக்கு வலது பக்கம் தான் ஏற்பட்டுள்ளது. ஒரு நபரை வழிமறித்து முன்பக்கமிருந்து வெட்டினால் இடது பக்கம் தான் காயங்கள் ஏற்படும் என்றால் காயம்பட்ட நபர் எந்த திசையை நோக்கி நின்றிருந்தாரோ அந்த திசையை நோக்கி தான் ஏற்படும். சி2, சி3 ஏற்பட்டுள்ள எலும்பு முறிவுகள் வெட்டு காயங்களால் ஏற்பட்டுள்ளது.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.